DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | சம்பத்குமார் |
| Father's Name | சுப்பிரமணியம் |
| Village | வாணியம்பாடி |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | உதவி கோட்ட பொறியாளர்<br>நெடுஞ்சாலைத்துறை |
| Age | 55 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **25.09.2025**

**O.S.No. 117 /2019** **பி.வா.சா.1**

**குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட தாவா சொத்து தற்போது யாருடைய சுவாதீனத்தில் உள்ளது என்றால் தனிநபர் ஆக்கிரமிப்பில் உள்ளது. வழக்கின் விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா ஆவண ரீதியாக தெரியுமா என்றால் ஆவணங்களின் அடிப்படையில் தான் தெரியும். மேற்படி ஆக்கிரமித்துள்ள தனிநபர்களின் பெயர்கள் தெரியுமா என்றால் திரு. கார்த்திக், திரு. ஏவி

சுரேஷ்குமார், திரு. அப்சர் பாஷா, திரு. ஐ.ரியாஸ் அகமத், திரு.பி.பாலு, ஆகியோர்கள் ஆகும்.

2. மேற்படி நபர்கள் தான் அந்த இடத்தில் ஆக்கிரமிப்பில் உள்ளார்கள் என்பதற்கு என்ன ஆதாரம் உள்ளது என்றால் களப்பணியாளர்கள் விசாரித்து தெரிவித்தன் அடிப்படையில் தெரியவந்தது. தாவா சொத்தில் கட்டுமானங்கள் இருக்கிறதா என்றால் இருக்கிறது. தாவா சொத்தில் மின் இணைப்பு உள்ளதாக வாதி கூறியிருப்பதற்கு விசாரித்து பார்த்தோமா என்றால் இல்லை. புலதணிக்கை செய்தபோது விசாரித்து பார்த்தோமா என்றால் ஆக்கிரமிப்பு செய்துள்ள கட்டிடங்களை மட்டும் ஆய்வு செய்தோம்.

3. வழக்கு சொத்தில் உள்ள ஆக்கிரமிப்பு எங்களிடம் உள்ள ஆவணத்தில் அடிப்படையில் எந்த ஆண்டு செய்துள்ளதாக இருக்கிறது என்றால் 2019-ம் ஆண்டு நாங்கள் புலதணிக்கை செய்தபோது ஆக்கிரமிப்பு இருப்பது தெரியவந்தது. மேற்படி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறியிருக்கும் கார்த்திக் என்பவர் வழக்கை தாக்கல் செய்துள்ள விஜயகுமார் என்பவரின் மகன் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. என்னிடம் தற்போது காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 –ல் ரசீது அல்லது ஒப்புகை அட்டையும் இணைக்காததற்கு என்ன காரணம் என்றால் அந்த சமயத்தில் இருந்த அதிகாரிக்கு ஏதோ ஒரு காரணத்திற்காக இணைக்காமல் இருந்திருக்கலாம், நேரடியாக சென்று சார்வு செய்திருக்கலாம். அப்படி நேரிடையாக சார்வு செய்து இருந்தால் சார்வு செய்வதற்கு ஒப்புகை பெற வேண்டுமா என்றால் பொதுவாக வாங்குவோம். மேற்படி நேரடியாக சார்வு செய்யப்பட்டது என்பதற்கு குறிப்பு அல்லது ஆதாரமோ வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

5. என்னிடம் தற்போது காட்டப்படும் பி.வா.சா.ஆ.7–ல் இணைக்கப்பட்ட ஒப்புகை சீட்டு யார் பெறப்பட்டுள்ளதாக குறிப்பு உள்ளது என்றால் விநாயகம் என்பவர் பெறப்பட்டுள்ளதாக இருக்கிறது. மேற்படி விநாயகம் என்ற நபருக்கும் கார்த்திக் என்பவருக்கும் தொடர்பு என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சார்வு செய்த அஞ்சல் துறை ஊழியர் அவரிடம் கொடுத்து கையொப்பம் பெற்று இருக்க வேண்டும் அவர் மாற்றி கொடுத்திருக்கலாம்.

6. 4–ம் பிரதிவாதி தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் வாதி தரப்பில்

குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களை நான் சரி பார்த்தேன் என்றால் பார்க்கவில்லை. வழக்கு சொத்தில் வாணியம்பாடி நகராட்சி வாதிக்கு பட்டா வழங்க தீர்மானம் நிறைவேற்றி இருப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளார்கள் மற்றும் வழக்கு சொத்தில் மின் இணைப்பு இருப்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளார்கள் மேற்படி ஆவணங்கள் வாதி ஆதரவாக உள்ளதால் தான் நான் அந்த ஆவணங்களை சரி பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு அகற்றி திரும்ப கொடுக்குமாறு தான் கேட்கிறோம்.

7. வழக்கு தாக்கல் செய்துள்ள விஜயகுமார் என்பவருக்கு தனிப்பட்ட முறையில் அறிவிப்பு ஏதேனும் எங்கள் சார்பாக கொடுத்துள்ளோமா என்றால் அவர் வழக்கு தாக்கல் செய்து விட்டதால் தனியாக அறிவிப்பதும் சார்வு செய்யப்படவில்லை. வழக்கு சொத்தில் இருந்து வாதியை வெளியேற்றுவதற்காக தனிப்பட்ட முறையில் நடவடிக்கை ஏதேனும் எடுத்து உள்ளோமா என்றால் இல்லை, நீதிமன்றத்தில் வாதி வழக்கு நிலுவையில் உள்ளதால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

8. வழக்கு சொத்தில் வாதி தான் ஆக்கிரமிப்பில் உள்ளார் என்பதற்கு கடந்த 2013 ஆம் வருடமே ஒரு அறிவிப்பு அனுப்பி இருக்கிறீர்கள் என்று சொன்னால் அது பற்றி தெரியவில்லை. மேற்படி அறிவிப்பு வழங்கிய பின்னும் கடந்த 2019 ஆம் வருடம் எங்களுக்கு சாதகமாக இருக்கும் நபர்களுக்கு அறிவிப்பு அனுப்பி வாதியை சட்டத்திற்கு புறம்பாக மறைமுகமாக வெளியேற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல 2019 ஆம் வருடம் களத்தில் சென்று ஆய்வு செய்து அந்த நேரத்தில் யார் ஆக்கிரமிப்பில் இருந்தார்களோ அவர்களுக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளோம்.

9. வழக்கு சொத்தில் தற்போது தார் சாலை பயன்பாட்டில் உள்ளதா என்றால் வழக்கு சொத்திற்கு அருகில் உள்ளது ஆனால் தற்போது அது போதுமானதாக இல்லை. மேற்படி தார் சாலைக்கும் வழக்கு சொத்திற்கு இடையில் தற்போது பேருந்து நிறுத்த நிழல் கூடம் மற்றும் ஒரு மின்மாற்றியும் உள்ளது என்று சொன்னால் இருக்கலாம். மேற்படி போக்குவரத்து நெரிசல் காரணமாக சாலையை விரிவுபடுத்த முதலில் அந்த பேருந்து நிழல் கூடம் மற்றும் ஒரு மின்மாற்றியும் அகற்றப்பட்டால் தான் சாலை விரிவாக்கம் செய்ய முடியும் என்று சொன்னால் விரிவாக்கம் செய்யும்போது தான் அரசிலிருந்து பட்ஜெட்

வந்த பிறகு தான் இவற்றை அகற்றி வேறு ஒரு இடத்திற்கு மாற்றி பிறகு விரிவாக்கம் செய்வோம்.

10. என்னிடம் தற்போது காட்டப்படும் வா.சா.ஆ.3 –ல் எங்கள் அலுவலகத்தில் இருந்து வாதிக்கு அனுப்பட்ட கடிதம் தானா என்றால் சரிதான் . மேற்படி அறிவிப்பு அனுப்பிய பிறகு ஆக்கிரமிப்பு ஏதேனும் அகற்றப்பட்டதற்கு எங்களுடைய அலுவலக கோப்பில் குறிப்பேதும் உள்ளதா என்றால் இல்லை, ஆக்கிரமிப்பும் அகற்றப்படவில்லை.

11. 2013–ல் அறிவிப்பு அனுப்பிய பிறகும் ஆக்கிரமிப்பு அகற்றப்படாமல் இருக்கும் மேற்படி நபருக்கு தற்போது வரை மீண்டும் ஒரு அறிவிப்பு அனுப்பாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்றால் 2013 அவர் இருந்திருக்கலாம் 2019–ல் களத்தில் ஆய்வு செய்தபோது அவர் பெயர் இல்லை. ஆகவே கடந்த 2013 ஆம் வருடமே ஆக்கிரமிப்பு இருந்த போதும் 2019 தான் ஆக்கிரமிப்புகள் இருந்தது என்று வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல, 2019 இல் தான் முழுமையாக கள ஆய்வு செய்தோம்.

12. என்னிடம் தற்போது காட்டப்படும் வா.சா.ஆ.7 வரிசை எங்கள் அலுவலகத்தால் வழங்கப்பட்ட தாக்கீதுகள் தான் என்றால் சரிதான். மேற்படி தாக்கீதுகளுக்கு பதில் கிடைக்கப்பெற்றதா என்றால் வரவில்லை, ஆனால் இரவுப் பள்ளி நடத்தப்படுவதாக பதில் ஒன்று பெறப்பட்டது. மேற்படி இரவுப் பள்ளி நடத்தப்படுவதாக பதில் ஒன்று பெறப்பட்டதாக கூறுகின்ற விவரத்தை பதிலுரையிலோ முதல் விசாரணை வாக்கு மூலத்திலோ கூறாததற்கு என்ன காரணம் என்றால் அந்த பதில் அறிவிப்பை கொடுத்தவர் வழக்கிற்கு சம்பந்தப்பட்டவர் இல்லை என்பதால். மேற்படி பதில்அறிவிப்பை அனுப்பிய நபரின் பெயர் என்னவென்றால் தற்போது தெரியவில்லை கோப்புகளை பார்த்தால் தான் தெரியும்.

13. பொதுவாக அகற்றப்பட வேண்டிய இடத்தில் உள்ள மின் இணைப்பை துண்டிப்பதற்கு அந்த நபரை அகற்றிய பின்பு கடிதம் அனுப்புவோமா அல்லது மின் இணைப்பை துண்டிப்பதற்கு கடிதம் அனுப்பிவிட்ட பிறகு அந்த நபரை அகற்ற முற்படுவோமா என்றால் இரண்டும் ஒரே நேரத்தில் தான் செய்யப்படும். தற்போது வரை 3–ம் பிரதிவாதிக்கு இந்த பிரச்சனை குறித்து மின் இணைப்பு துண்டிப்பதற்கு அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்றால் சரிதான், வழக்கு நிலுவையில் இருப்பதால் அப்படி எதுவும் அனுப்பப்படவில்லை.

14. கடந்த 2013 ஆம் வருடத்திற்கு முன்பில் இருந்தே வாதியிடம் தான் வழக்கு சொத்து ஸ்வாதீனம் உள்ளது என்று சொன்னாலும் பின்னிட்டு 2019 ஆம் வருடம் எங்களுக்கு ஆதரவாக இருக்கும் நபர்களின் பெயரில் அறிவிப்பு அனுப்பி வாதியை சட்டத்திற்கு புறம்பாக வெளியேற்ற முற்படுகிறோம் என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக தமிழ்நாடு ஆக்கிரமிப்புதாரர்கள் அகற்று சட்டம் 1905 பிரிவு 7–ன் படி ஆக்கிரமிப்புதாரர்களுக்கு அறிவிப்பு தராமல் அவர் அகற்ற முடியுமா என்றால் முடியாது.

15. தற்போது வரை வாதிக்கு அறிவிப்பு வழங்காததற்கு என்ன காரணம் என்று கூற முடியுமா என்றால் கள ஆய்வின்போது அவர் பெயர் குறிப்பிடப்படவில்லை. தாவாசொத்தில் உள்ள கட்டுமானத்திற்கு வாதி பெயரில் தான் மின் இணைப்பு உள்ளது என்று தெரிந்தும் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது பற்றி நாங்கள் விசாரிக்கவில்லை. மேற்படி விவரத்தை குறித்து வழக்கிலே நாங்கள் தாக்கல் செய்திருக்கிறோம் என்று சொன்னாலும் அது தெரிந்தும் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. வாதி தன்னை சட்டத்திற்கு புறம்பாகத்தான் வெளியேற்றக் கூடாது என்று கோரியுள்ளார் என்பதாலும் வாதியின் வழக்கு வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவுற்றது.

மறு விசாரணை இல்லை

4–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

*DISTRICT MUNSIF*

***ESHWAR VISWANATHAN***

*Digitally signed by ESHWAR VISWANATHAN*

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**வாணியம்பாடி.**